**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.141/2014 இ.ம.எண்.

எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.1**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சத்யவாணி | வட்டம் | : | ஈரோடு |
| த/பெ. | : | | மாவட்டம் | : | ஈரோடு |
| க/பெ. | : | நாகராஜ பண்ணாடி | தொழில் | : | |
| கிராமம் | : | சூரியம்பாளையம் | வயது | : | 68 |

**வா.சா.1: முதல் விசாரணை**:-

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகளை உண்மையென நேரில் அறிந்து கையெழுத்து செய்துள்ளேன்.

21.09.1966-ம் தேதிய கிரைய பத்திர நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், 29.06.1973-ம் தேதிய எனது கணவர் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திர நகல் **வா.சா.ஆ.2** ஆகவும், 21.10.1998-ம் தேதிய அடமான கடன் மற்றும் கடன் செலுத்திய ரசீது **வா.சா.ஆ.3** ஆகவும், கந்தாய ரசீதுகள் (3 எண்ணிக்கை) **வா.சா.ஆ.4** ஆகவும், 28.06.2012-ம் தேதிய அறிவிப்பு (அலுவலக நகல்) **வா.சா.ஆ.5** ஆகவும், 20.07.2012-ம் தேதிய 3-ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.6** ஆகவும், 12.07.2012-ம் தேதிய

4-ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.**7 ஆகவும், 30.06.2012-ம் தேதிய முதல் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.**8 ஆகவும், 30.06.2012-ம் தேதிய 2-ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.**9 ஆகவும், 30.06.2012-ம் தேதிய 3-ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.**10 ஆகவும், 03.07.2012-ம் தேதிய 4-ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.**11 ஆகவும், 03.03.2014-ம் தேதிய பட்டா (அசல்) **வா.சா.ஆ.**12 ஆகவும், 03.03.2014-ம் தேதிய "அ" பதிவேடு (அசல்) **வா.சா.ஆ.**13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**